கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 22.04.2022 அ.வ.எண். 427/2017 வா.சா.1 நிர்மலாதேவி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என்ன படித்துள்ளேன் என்றால் BSC Home science படித்து அதை முடிக்க இயலவில்லை. எந்த வருடம் படிப்பைதொடர இயலவில்லை என்றால் அது ஞாபகம் இல்லை. நான் தற்போது எந்த முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் 71 அம்பாள் நகர், மேற்கு தாம்பரம், காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரியில் வசித்துவருகிறேன். மேற்படி முகவரியில் எத்தனை வருடமாக வசித்து வருகிறேன் என்றால் 10 வருடமாக வசித்து வருகிறேன். அதற்கு முன்பு எங்கு வசித்தேன் என்றால் பழனியில் உள்ள எனது அண்ணன் வீட்டில் சுமார் 10, 15 வருடங்கள் வசித்து வந்தேன். எனது தகப்பனார் பெயர் காளியப்பகவுண்டர். என்னுடன் பிறந்தவர்கள் எததனை பேர் என்றால் 4 பெண்பிள்ளைகள் ஒரு மகன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் Caretaker ஆக உள்ளேன். நான் சொந்த வீட்டில் தற்போது வசித்து வருகிறேன் என்றால் எனக்கு சொந்தவீடு இல்லை. நான் யார் வீட்டில் Caretaker ஆக உள்ளேன் என்றால் சிவக்குமார் என்பவர் வீட்டில் பணிபுரிகிறேன். சிவக்குமாரின் அப்பா பெயர் எனக்குத் தெரியாது. அவர்கள் எந்த முகவரியில் உள்ளார்கள் என்றால் நான் தற்போது சொன்ன சென்னை முகவரியில் தான் உள்ளார்கள். நான் தற்போது வசித்து வரும் முகவரிக்கு ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை உள்ளதா என்றால் ஆதார் அட்டை உள்ளது. வாக்காளர் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை தேவையில்லாததால் அதை நான் பெறவில்லை. நான் எத்தனை வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் ஒரே வங்கியில் தான் கணக்கு வைத்துள்ளேன். அந்த வங்கி கணக்கு 2017 ம் ஆண்டில் ஆரம்பித்தேன். அதற்கு முன்பு வங்கி கணக்கு எதுவும் இல்லை என்றால் சரிதான். வழக்குரையில் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யார் சொல்லி தயார் செய்தார்கள் என்றால் நான் சொல்லி தான் தயார் செய்தார்கள். எதற்காக பிரதிவாதிகளை இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் என்னுடைய கணவர் பெயருக்கு பத்மாவதி, பானுமதி ஆகியோர் தவறுதலாக வாரிசு சான்றிதழ் பெற்று விட்டனர் என்பதால் அவர்களை கட்சி சேர்த்துள்ளேன். எனது பெற்றோர் காலமாகிவிட்டார்கள். எனது தகப்பனார் என்ன வேலை பார்த்து வந்தார்

என்றால் வழக்கறிஞராக இருந்து காலமாகிவிட்டார். எனது தகப்பனாரின் சொந்த ஊர் பழனி. எனது தகப்பனார் 1981ல் காலமாகிவிட்டார். எனது தாயார் 2005ம் ஆண்டு காலமாகிவிட்டார். எனது பெற்றோரின் இறுதி சடங்கிற்கு நான் வரவில்லை என்றால் சரியல்ல. நான் அங்கு தான் இருந்தேன். எனது மகளுடன் எத்தனை வருடம் இருந்தேன் என்றால் 14 வருடம் இருந்தேன். எனக்கும் காலமான சின்னத்துரைஎன்பவருக்கும் பெரியவர்களால் நிச்சியக்கப்பட்டு எனது சம்மதத்தின் பேரில் தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணமாகி எத்தனை வருடம் எனது கணவருடன் ஒன்றாக வசித்தேன் என்றால் 10 வருடம் ஒன்றாக இருந்தேன். 10 வருடம் எங்கு வசித்து வந்தோம் என்றால் பொள்ளாச்சி அங்கலக்குறிச்சியில் வசித்து வந்தோம். திருமணம் ஆனபோது எனக்கு என்ன வயது என்ன என்றால் 19. குழந்தை எப்போது பிறந்தது என்றால் திருமணம் ஆகி 5 வருடம் கழித்து 1981ல் குழந்தை பிறந்தது. குழந்தை பிறக்கும் போது எனக்கு வெளி உலகஅறிவு தெரியாது என்றால் சரிதான். தற்போதும் எனக்கு அவ்வளவாக வெளிஉலகஅறிவு இல்லை. குழந்தை பிறந்த பிறகு எத்தனை வருடம் சின்னத்துரையுடன் வாழ்ந்தேன் என்றால் 1986 வரை வாழ்ந்தேன். சின்னத்துரைக்கு மனநிலை சரியில்லை என்றுஎன்னுடைய வழக்குரையில் மற்றும் முதல்விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எப்போது அவருக்கு மனநிலை சரியில்லை என்பதை குறித்தோ அவரை மருத்துவமனைக்கு யார் கூட்டிசென்றார்கள் என்பது குறித்தோ வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சின்னத்துரை நல்ல மனநிலையில் ஆரோக்கியமாக இருந்த காரணத்தால் தான் அவரது மனநிலை பற்றிய சங்கதிகளை என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக சின்னத்துரையை மனநிலை சரியில்லாதவர் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் என் மாமியார் மறறும் என் கணவரின் சொந்தக்காரர்கள் ஏளனமாக நடத்தியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்ன ஏளனமாக நடத்தினார்கள் என்றால் என் கணவருக்கு மருந்துசரியாக கொடுக்கவில்லை என்று மனநிலை பாதிக்கப்பட்டவரை சரியாக பார்த்துக்கொள்வதில்லை என்று ஏளனமாக நடத்தினார்கள். சின்னதுரை நல்ல

மனநிலையில் தான் இருந்தார் என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உண்மையில் சின்னத்துரை மனநிலை பாதிக்கப்பட்டிருந்தால் நான் அப்போது உரிய சட்ட நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. நான் என் மகளை எப்போது பிரிந்தேன் என்றால் அவருக்கு 16 வயது இருக்கும் போது என் அண்ணனிடம் விட்டு சென்றேன். இந்த தகவலை என்னுடைய வழக்குரையிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகள் தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் பழனியில் வசித்து வருகிறார். எனது மகளுக்கு திருமணம் ஆன விபரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் கணவரின் பெயர் என்ற இடத்தில் லேட் சின்னத்துரை என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கு புத்தகமானது 22.11.2017 துவங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 பிறப்பு சான்றிதழில் பெயர் இல்லாமல் உள்ளது என்றால் சரிதான். கஅந்தசான்று குழந்தை பிறந்து 10 நாளில் கொடுக்கப்பட்டது. பெயர் வைத்த பிறகு பிறப்பு சான்று பெறவில்லை. குடும்ப வழக்கப்படி ஒரு பத்திரிக்கை அச்சடித்தால் அதில் மகன் வழி பேரன் என்றும், மகள் வழி பேரன் என்றும் பெயர்கள் இருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆன காதணி விழா அழைப்பிதழில் தெய்வதிரு சின்னத்துரைஅவர்களின் மகள்வழி பேத்தி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர என்னுடையபெயர் குறிப்பிடவில்லை என்றால் நான் சென்னையில்இருந்ததால் என்னுடைய பெயர் அதில் போடவில்லை. வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவை என் வழக்கறிஞருக்குத் தான் தெரியும். எனக்கும், சின்னத்துரைக்கும் ஆன திருமணம் HMOP 90/1986 என்ற மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி ரத்து செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. விவாகரத்து செய்யும் சமயத்தில் என் தகப்பனார் வீட்டில் பழனியில் இருந்தேன். மேற்படி HMOP 90/1986 மனுவில் எனக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு நான் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தால் தோன்றாதரப்பினராக்கப்பட்டேன் என்றால் சரியல்ல. அதன்பிறகு தான் சின்னத்துரைக்கும் 2ம் பிரதிவாதிக்கும் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. அவர்களுக்கு அபர்ணா என்ற ஒரு பெண் குழந்தை உள்ளார்

என்றால் எனக்குத் தெரியாது. நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் போது அபர்ணா மற்றும் அவரது கணவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் எனது வழக்கறிஞரை கேட்டால் தான் தெரியும். 04.07.2007 ம் தேதியில் சின்னத்துரை, பிரியா மற்றும் அபர்ணா ஆகியோர் பதிவு செய்யப்பட்ட குடும்ப பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. பிரியா, மற்றும் அபர்ணா மகள்கள் என்று குறிப்பிடப்பட்டு பாகம் செய்யப்பட்டது என்றால் எனக்குத் தெரியாது. குடும்ப உறுப்பினர்களுக்குள் தான் பாகம் செய்து கொள்வார்கள் என்றால் சரியல்ல. பரிதாபப்பட்டு வேறு நபர்கள் உடனும் பாகப்பிரிவினை செய்து கொள்வார்கள். இவ்வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வாதம் குறித்து தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி தற்போது எதிர்வாதம் குறித்த விபரங்கள் தெரியும் என்று குறிப்பிடுகிறார். ஆனால் அவை பொய் என்றும் குறிப்பிடுகிறார். எதிர்வாதத்தில் விவாகரத்து குறித்த விபரங்கள் பாகப்பிரிவினை குறித்த விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவை எனக்கு தேவையில்லாதவை. பாகப்பிரிவினை குறிப்பிட்ட விபரங்கள் எனக்குத் தெரியும் என்றாலும் வழக்கிற்காக நான் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாரிசு சான்று பொருத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் பிரியா, மற்றும் அபர்ணா அவசிய தரப்பினர் என்பதால் அவர்களை கட்சி சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி உயர்அதிகாரியான கோயமுத்தூர் மாவட்ட ஆட்சியரையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி சின்னத்துரையின் மனைவி என்று குறிப்பிட்டு என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விவாகரத்து தொடர்பாக நான் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் குறிப்பிடும் முகவரியில் உள்ள சக்திவேல் என்பவருடன் எனக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. நான் தற்போது தனியாக தான் உள்ளேன் என்று சான்று வாங்கி

அளிக்க முடியுமா என்றால் அது எனக்கு தேவையே இல்லை. எனக்கு திருமணம் ஆகிவிட்டதால் தான் என்னால் சான்றிதழ் வழங்க இயலாது என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)/– P. சுபாஷினி**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி